ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1998/38 - 2016 දෙසැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2016.12.23

*1998/38 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 3/2009* (III)

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க. இலங்கை மின்சாரச் சட்டம்**

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 53 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகள்.*

சாலிய மத்தியூ,
தவிசாளர்,
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.

கொழும்பு,
2016, நவெம்பர் 23.

**விதிகள்**

1. இவ்விதிகள் 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (மின்சார வழங்கல் தொடர்பில் ஒரே தடவையில் மொத்தச் செலவினத்தை கொடுத்து தீர்ப்பதற்கான வழிவகைகளின் போதியதற்ற தன்மை பற்றிய தகவல்கள்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ், மின்சார வழங்கலொன்றைத் போதியதற்ற தன்மை தேவையாகவுள்ளவரும், ஆனால் ஏதேனும் மின்சார வழியை அல்லது மின்பொறித்தொகுதியை அல்லது மின்சார இணைப்பையும் மின்சார வழங்கலையும் வழங்குவதில் மின்விநியோக உரிமம் பெறுநரினால் நியாயமாக கூறப்பட்ட செலவுகளை மொத்தமாக ஒரே தடவையில் செலுத்துவதற்குப் போதிய வழிவகைகளில்லாதவரான எவரேனும் ஆள் இறுப்பனவு உடன்படிக்கைக்கிணங்க, விநியோக உரிமம் பெறுநரினால் விதிக்கப்பட்ட இறுப்பனவு மற்றும் வேறு எவையேனும் கட்டணங்களுடன் வரிகளும் சேர்த்து, நியாயமான மாதாந்தக் தவணைக் கட்டணங்களுடன் அத்தகைய செலவுகளை அறவிடுவதற்கு விநியோக உரிமம் பெறுநரைக் கோரலாம்.

3. மின்சாரப் விநியோக உரிமம் பெறுநர் மின்சார வழியை அல்லது மின்பொறித்தொகுதியை, அல்லது மின்சாரஇணைப்பையும் மீள் வழங்கலையும் வழங்குவதற்கு முன்னர், அத்தகைய வழங்கலை கோரும் ஆளினால் செலவுகள் ஒரே தடவையால் செலுத்துவதற்குப் போதிய வழிவகைளில்லலாதவர் எனத் திருப்திப்படுமிடத்து, விநியோக உரிமம் பெறுநர் அவருக்கான செலவுகளை எம்முறையில் செலுத்தப்பட வேண்டுமோ அம்முறை அத்தகைய தொடர்பான ஒரு உடன்படிக்கையாக செய்துகொள்ளும்படி அத்தகைய ஆளை கோருதல் வேண்டும்.

4. எதிர்பார்ப்புடைய வீட்டுப் பாவனையாளரொருவருக்கு மின்சார இணைப்பையும் வழங்கலையும் ஏற்பாடு செய்வதில் விநியோக உரிமம் பெறுநரினால் கூறப்படும் மொத்ததத்தினையும் ஒரே தடவையால் செலுத்துவதற்கு போதிய வழிவகைகள் இருக்கின்றவா என்பதனை நிச்சயப்படுத்திக் கொள்ளும் நோக்கத்திற்கான கட்டளைகள் வீட்டு வருமானத்தின் மட்டத்தின் மீதான அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

5. பின்வரும் கட்டளைகளானது எதிர்பார்ப்புடைய வீட்டுப் பாவனையாளர் இணைப்பு மற்றும் வழங்கலை ஏற்பாடு செய்வதில் விநியோக உரிமம் பெறுநரினால் உறப்பட்ட செலவுகளினை ஒரே தடவையால் மொத்தமாக செலுத்துவதற்கு போதிய வழிவகைகள் கொண்டிருக்கவில்லை என திருப்பதிப்படுகின்ற நோக்கத்திற்காக பயன்படுத்தல் வேண்டும்.

(i) மின்சார வழங்கலைக் கோருகின்ற ஆள் (மின்சார வழங்கல் தேவைப்படும்) வளாகத்தின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர்) வாழ்வின் எழுச்சி பயனாளியொருவராகவுள்ள நிகழ்வு ; அல்லது

(i) எந்த வளவுகளில் மின்சார வழங்கல் தேவைப்படுகின்றதோ அவ்வளவுகளில் மின்சார வழங்கலை கோருகின்ற சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் உள்ளடங்கலாக இருப்பாட்சியாளர்களின் மாதாந்த குடும்பவருமானமானது குடும்ப வருமான செலவின ஆய்வு அடிப்படையில் (குவசெஆ) காலத்துக்காலம் குடிசன மதீப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தினால் குறித்துரைக்கப்படுகின்றவாறு இலங்கையில் நடுத்தரக் குடும்ப வருமானும் 50% வீதத்திற் குறைவாக இருக்கின்றதென்ற நிகழ்வு.

6. தீர்மானத்தினைச் செய்வதற்கு மின்விநியோக உரிமம் பெறுநரால் தேவைப்படுத்தப்படும் தகவல்கள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) எந்தவளவுகளில் மின் விநியோக தேவைப்படுகின்றதோ அவ்வளவுகளின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளராகவுள்ள மின்வழங்கலை கோருகின்ற ஆள் வாழ்வின் எழுச்சி பயனுகரி ஒருவராக இருப்பின், கிராம உத்தியோகத்தர் அதனை பிரதேச செயலாளரினால் மேலொப்ப இடப்பட்டு விநியோகிக்கப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் சான்றிதழொன்று;

(ii) மின்சார வழங்கலைக் கோருகின்ற சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் மாதாந்தக் குடும்ப வருமானம் இலங்கையில் நடுத்தரக் குடும்ப வருமானமாகிய 50% வீதத்திற்குக் குறைவாக இருப்பின், அதனை உறுதிப்படுத்தி இயைபானபிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட வருமான மதிப்பீட்டுப் படிவம்.

7. மின்வழியை, மின்பொறித்தொகுதி அல்லது இணைப்பை வழங்குவதில் மற்றும் வழங்கலில் மின்விநியோக உரிமம் பெறுநரினால் நியாயமானவளவில் உறப்படும் செலவுகள், நியம இறுப்பளவு உடன்படிக்கைக்கிணங்க விநியோக உரிமம்பெறுநரினால் அறவிடப்படும் இறுப்பனவு மற்றும் ஏனைய வேறு கட்டணங்களுடன் சேர்த்து நியாயமான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் அறவிடப்படுதல் வேண்டும் ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய மாதாந்தத் தவணைக் கட்டணங்கள் :

(i) (குடும்ப வருமானம் மற்றும் செலவின ஆய்வு அடிப்படையின் மீது காலத்துக்காலாம் குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபர திணைக்களத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கையிலுள்ள குடும்பங்களின் நடுத்தர குடும்பவருமானத்தின் ஐந்து சதவீதத்திற்கு சமனாகவுள்ள) 1,500 ரூபாவுக்கு மேற்படாத ஆகக்கூடிய கழிப்பனவுடன் சேர்த்து வெளிப்படுத்தப்பட்ட குடும்ப வருமானத்தின் ஐந்து சதவீதத்திற்கு மேற்படாததாகவிருத்தல் வேண்டும்.

(ii) 24 மாதங்களுக்கு குறையாத ஒரு காலப்பகுதிக்கு மேலாக அறவிடப்படுதல் வேண்டும் ;

(iii) ஏற்புடையற்பாலதாயின், பயிர்ச்செய்கை சுழற்சி போன்ற அத்தகையதான வருமான மாதிரிகளின் பருவகால வேறுபாடுகளின் வேறுபாடுகளுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

8. வட்டி வருமதியான திகதியின் பின்னர், நியம இறுப்பனவு உடன்படிக்கைக்கிணங்க மட்டும் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படும் வீதத்திலும் மாத்திரம் அறவிடப்படலாம்.

9. 55 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், ஓய்வூதியம் பெறுகின்றவர்கள், பாதுகாப்புப் படையில் அங்கவீனமுற்ற படைவீரர்கள் விநியோக உரிமம்பெறுநர் மின்விநியோகத்தை கோருகின்ற ஆள், வளவுகளின் சொந்தக்காரராக இருந்தாலென்ன, வளவுகளின் பரப்பளவு மற்றும் வீடமைப்பு தொடர்பான நிலமைகள் முதலியனவும்அத்தகைய ஆட்கள் போதிய வழிவகைகளைக் கொண்டிருக்காதவர் என திருப்திப்பட்டும் தொடர்பான மேலேயுள்ள கட்டளைக்கற்களை ஈடு செய்யாத வீட்டுப்பாவனையாளராக வருபவரிடமிருந்து விநியோக உரிமம் பெறுநர் தோதானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஏனைய கட்டளைக்கற்களை நியாயமாகவும் மற்றும் வெளிப்படையான முறையிலும் கடைபிடித்தலும் வேண்டும்.

10. விநியோக உரிமம் பெறுநர் வீட்டுப்பாவனையாளர்கள் தவிர்ந்த நபர்களையும் கருத்திற்கொண்டு, அந்த விநியோக உரிமம் பெறுநர் தோதானதெனக் கருதுகின்றவாறு ஒன்றில் தனியாள் அல்லது அத்தகயை வேறு மூலப்பிரமாணங்களை நியாயமாகவும் மற்றும் வெளிப்படைத் தன்மை வாய்ந்ததாகவும் ஏற்றல் வேண்டும்.

*11.* அத்தகைய ஏனைய கட்டளைக்கற்களை கடைபிடிப்பதில் மின்விநியோக உரிமம்பெறுநர், போதியதற்றதாக அமைகின்றது, என தனிப்பட்ட பாவனையாளர் வகுதிக்கும், கோரப்பட்ட இணைப்பினதும் மின்வழங்கலின் தன்மைக்கும் நோக்கெல்லைக்கும் வேறுபடுமென்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் மின்விநியோக உரிமம் பெறுநர் இயன்றவிடத்து இனவகையினவான கட்டளைக்கல்லை கடைப்பிடிப்பதில் ஒவ்வொரு விடய அடிப்படையிலும், ஒவ்வொரு கோரிக்கையையும் கவனத்தில் கொள்ளுதலும் வேண்டும்.

*12.* இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையால் தேவைப்படுத்தினாலன்றி :

"சட்டம்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம் எனப் பொருள்படும் ;

"ஆணைக்குழு" என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எனப் பொருள்படும்.

"மின்விநியோக உரிமம் பெறுநர் தரப்பு" என்பது, சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவானது (இ) (i) (இ) பந்தியின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள இடப்பிரதேசத்தில் வழங்கக்கூடிய மின்சார வழங்கல் இயலச் செய்யும் அல்லது ஏதேனும் வளவில் மின்சார வழங்கல் நோக்கத்திற்காக மின்சாரத்தைப் விநியோகிப்பதற்கும் மின்சாரத்தை வழங்குவதற்கும் அல்லது மின்சாரத்தை விநியோகிப்பதற்கும் மற்றும் வழங்குவதற்கும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளவரான ஆளொருவர் என்று பொருள்படும்.

"வீட்டு மின்பாவனையாளர்" என்பது, வீட்டு மின்சார நுகர்வோர் இறுப்பனவு எனும் வகுதியின் கீழ் மின்சாரம் வழங்கப்படுகின்றவரான ஆளொருவர் எனப் பொருள்படும்.

1- 209

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.